# திருகோணமலை, சம்பூரில் உருவாக்கப்படவிருந்த கனரகக் கைத்தொழில் விசேட வலயத்தை ரத்துச்செய்தல்

09 மே 2015 திருகோணமலை, சம்பூரில் கனரகக் கைத்தொழில் விசேட வலயத்துக்கென உருவாக்கப்படவிருந்த திட்டத்தைக் கைவிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன எடுத்த நடவடிக்கையை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA) வரவேற்கின்றது. 2015 மே 07 திகதிய, 1913/19 இலக்கங்கொண்ட (விசேட) வர்த்தமானி அறிவித்தலூடாக, முதலீட்டுச் சபைக்குப் (BOI) பொறுப்பளிக்கப்பட்டிருந்த காணிகளையும் மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்படி வர்த்தமானி அறிவித்தல் 1978 ஆம் ஆண்டின் 4ஆம்இலக்க இலங்கை முதலீட்டுச்சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட 2012 மே 17, 1758/26 இலக்கங்கொண்ட (விசேட) வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுகின்றது. காணிகளை மீண்டும் அவற்றின் ஆரம்பகால உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டுமென்று 2015 பெப்ருவரியில் அமைச்சரவை மேற்கொண்ட ஒரு தீர்மானத்தைத் தொடர்ந்து தற்போதைய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகும். இது அரசியலமைப்பில் உத்தரவாதம் செய்யப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் மீளிணக்கத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் இடம்பெற்ற காலோசிதமான நடவடிக்கையுமாகும்.

'உயர் பாதுகாப்பு வலயங்கள் (HSZ) மற்றும் பொருளாதார வலயங்கள் தாபிக்கப்பட்டமை உள்ளிட்டவகையிலான பல காரணங்களின் நிமித்தம் தமது சொந்தக்காணிகளுக்குத் திரும்பிச் செல்ல முடியாதிருந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களாகிய ஆயிரக்கணக்கானோர் மீதான விசேட கவனத்துடன், 2006 முதல் கிழக்கு மாகாணத்தில் மனிதாபிமான நிலைமைகளைக் கண்காணித்துவரும் CPA அமைப்பு இந்த முக்கியமான செயற்பாட்டை அவதானிக்கின்றது.

2007 இல் 30 மே 2007 திகதியும், 1499/25 இலக்கமுங்கொண்ட (விசேட) வர்த்தமானி அறிவித்தலூடாக ஓர் உயர் பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட்டு, 12,000 மக்கள் தமது காணிகளுக்குத் திரும்பிச்செல்லமுடியாதவாறு தடுக்கப்பட்டனர். CPA அமைப்பும், நான்கு காணிச் சொந்தக்காரர்களும் 2007 இல் உயர் நீதிமன்றத்தில் இந்த வர்த்தமானி அறிவித்தலை சவாலுக் குட்படுத்தினர் (SC FR 219/2007). இதன் பின்னர் உயர்பாதுகாப்பு வலயத்தின் அளவு சிறிது குறைக்கப்பட்டு, சிலர் தமது காணிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆயினும் ஏனைய பலர் அளவிற்குறைந்த உயர் பாதுகாப்பு வலயம் இருப்பதன் காரணமாகத் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த நிலையிலேயே வாழ்ந்தனர்.

2012 இல் கனரகக் கைத்தொழில்களுக்கான விசேட வலயம் தாபிக்கப்பட்டமை முன்னைய ஆட்சியாளர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தமது காணிகளுக்குத் திரும்பிச்

செல்வதைத் தடுக்கும் வகையில் மேற்கொண்ட ஆகப்பிந்திய நடவடிக்கையாகும். CPA அமைப்பு ஏழு காணிச் சொந்தக்காரர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தலை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்வதற்கு ஆதரவளித்தது. இச் செயல்முறை மூலம் BOI சட்டத்தின் 22Aன் விசேட கனரகக் கைத்தொழில் பிரிவின் ஏற்பாடுகளை மீறும் வகையில் இத்தகைய விசேட கனரகக் கைத்தொழில் வலயம் உருவாக்கப்பட்டதன் தவறான அடிப்படை குறித்தும் வினா எழும்பியது. CPA அமைப்பின் பல கொள்கை வெளியீடுகள் ஏறக்குறைய ஒன்பது வருடங்களாக முகாம்களில் வசித்த மக்களின் மோசமான வாழ்க்கை நிலைமைகள் மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் சம்பந்தமான நிலைமைகளையும் வெளிப்படுத்தின.

தற்போதைய நடவடிக்கையோடு ஒட்டியவகையில், CPA அமைப்பு தன்னிச்சையான உயர் பாதுகாப்பு வலயங்கள் இருப்பதையும், சட்டத்தின் உரிய செயல்முறைக்கு இணக்கமற்றவகையில், பாதுகாப்புப்படையினரும், ஏனையோரும் காணிகளை ஆக்கிரமித்துள்ளமையையும் மீள் பரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்துக்கு விடுத்த வேண்டுகோள்களை மீண்டும் வலியுறுத்துகின்றது.

இந்த நடவடிக்கையும், அரசாங்கம் சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கில் சில காணிகளை மீளவும் வழங்கியமையும் அரசியலமைப்பு உத்தரவாதங்களையும், சட்டரீதியான பாதுகாப்புகளையும் மதித்துச் செயலாற்றும் நீண்டகால உத்தியின் ஆரம்பப்படிகளாக விளங்குதல் வேண்டும். CPA அமைப்பு 1950 ஆம் ஆண்டில் 09ஆம் இலக்க காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் குறைபாடுகள் குறித்துத் தொடர்ச்சியாகவே கரிசனைகளை வெளிப்படுத்தி வந்துள்ளது. அதன் சீர்த்திருத்தத்துக்கான விதப்புரைகளையும் முன்வைத்துள்ளது.

எவ்வாறாயினும், எந்தவிதமான காணிச் சுவீகரிப்பு முயற்சிகளும், தற்போதுள்ள சட்டத்தின் சட்டகத்திலுள்ளவாறு இணங்கும் வகையில் மேற்கொள்ளப்படவேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்துகின்றது. இந்த விவகாரங்கள் இலங்கையில் மீளிணக்கத்தோடு பிரிக்கமுடியாத வகையில் ஒன்றிணைந்தவை என்பதோடு, மேலும் தாமதமின்றி இவற்றுக்குத் தீர்வுகாணப்படுதலும் வேண்டும்.

சிங்கள மற்றும் தமிழ் வர்த்தமானிகள் குறித்த இணைப்பு உசாவல்கள் :

- (விடேச) வர்த்தமானி இல.1499/25 திகதி 30 மே 2007 (S/E)
- (விடேச) வர்த்தமானி இல.1758/26 திகதி 17 மே 2012 (S/E)
- (விடேச) வர்த்தமானி இல.1913/19 திகதி 27 மே 2015 (S/E)

இந்த விவகாரம் சம்பந்தமாக இதற்கு முன்னர் இடம்பெற்ற CPA அமைப்பின் சில பணிகள்

- பவானி பொன்சேகா மற்றும் மிராக் ரஹீம், திருகோணமலை உயர் பாதுகாப்பு வலயமும், விசேட பொருளாதார வலயமும், செப்டம்பர் 2009

- பவானி பொன்சேகா மற்றும் மிராக் ரஹீம், கிழக்கு மாகாணத்தில் காணிகள் - அரசியல் கொள்கை மற்றும் முரண்பாடு, மே 2010
- பவானி பொன்சேகா மற்றும் தர்ஷா ஜெகதீஸ்வரன், இலங்கையின் வடக்கு- கிழக்கில் காணிகள், சுவீகரிப்பு மற்றும் தொடர்புள்ள விவகாரங்கள் சம்பந்தமான அரசியல், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், நவம்பர் 2013